## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

**செய்தி வெளியீட்டு எண்:** 128 /2025 **நாள்:** 16.09.2025

## செய்திக்குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்:09/2024, நாள் 26.07.2024 இல் அறிவிக்கப்பட்ட ஒருங்கிணைந்த தொழில் நுட்பப் பணிகள் தேர்வில் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) அடங்கிய கீழ்க்காணும் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களில் நேரடி நியமனம் செய்வதற்கு தேர்வர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட சான்றிதழ்கள் / ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டன. சரிபார்ப்புக்குப் பின்னர், சில சான்றிதழ்கள்/ ஆவணங்கள் முழுமையாக / சரியாக பதிவேற்றம் செய்யப்படாமல் / குறைபாட்டுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது:

| வ.எண் | பதவியின் பெயர் | பதவிக் குறியீடுகள் |
|---|---|---|
| 1. | வேதியியலாளர் மற்றும் இளநிலை வேதியியலாளர் | 1913 மற்றும் 1914 |
| 2. | காப்பாட்சியர் ( வேதியியல் பாதுகாப்பு ) | 2127 |
| 3. | பண்டகக் காப்பாளர் | 1768 |
| 4. | உதவி மேலாளர் சேமிப்பு கிடங்கு / இளநிலை உதவியாளர் | 3388 |
| 5. | உதவி மேலாளர் | 3349 |
| 6. | கணக்கிடுபவர் மற்றும் தடுப்பூசி பண்டகக் காப்பாளர் | 3201 |
| 7. | துணை மேலாளர் (தர நிர்ணயம்) | 3348 |

எனவே, இத்தகைய தேர்வர்கள் **16.09.2025 முதல் 21.09.2025 வரை (இரவு 11.59 மணிக்குள்)** விடுபட்ட மற்றும் முழுமையான சான்றிதழ்களை / ஆவணங்களைப் பதிவேற்றம் / மீள் பதிவேற்றம் செய்ய இறுதி வாய்ப்பு வழங்கப்படுகிறது. மேற்படி தேர்வர்களின் பதிவெண்களைக் கொண்ட பட்டியல் தேர்வாணையத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான குறிப்பாணை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தகவல், அத்தேர்வர்களுக்கு குறுஞ்செய்தி, மின்னஞ்சல், ஆகியவற்றின் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அத்தேர்வர்கள் அனைவரும் குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை/ ஆவணங்களை தேர்வாணைய இணையதளத்தில் அவர்களுடைய ஒருமுறை பதிவுக் கணக்கின் ( OTR Account ) வாயிலாக பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், அத்தகைய தேர்வர்களின் உரிமை கோரல் (claim) / விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ச . கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப.,

செயலாளர்